**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF M/s. A.SASIMOHAN ROUGH STONE QUARRY AT S.F.NO.389 (PART) OVER AN EXTENT OF 2.02.5 HA IN KALAPPANAHALLI VILLAGE, KARIMANGALAM TALUK, DHARMAPURI DISTRICT ON 20.08.2024 AT 10.30 A.M., IN M/S. SRI BANNARIAMMAN MAHAL, PERIYAMPATTI VILLAGE, KARIMANGALAM TALUK, and DHARMAPURI DISTRICT.**

**Project Name: M/s. A.Sasimohan Rough Stone Qaurry, Dharmapuri.**

**PRESIDING OFFICERS:**

| | | |
|---|---|---|
| 1. Tmt.R.Gayathri | : | Revenue Divisional Officer, Dharmapuri. |
| 2. Er.A.Nithyalakshmi | : | District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Dharmapuri. |

List of Project representatives, Government staff and public participated is enclosed

**District Environmental Engineer, Dharmapuri**

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri welcomed the Revenue Divisional Officer, Dharmapuri, other Government Officials, Public, Social & Environmental activists for the Public Hearing and informed that the M/s. A.Sasimohan Rough Stone Quarry has proposed to quarry rough stone at S.F.No.389 (part) over an extent of 2.02.5 ha in Kalappanahalli Village, Karimangalam Taluk, and Dharmapuri District.M/s. A.Sasimohan Rough Stone Quarry has obtained mining approval from the Mining and Geology Department and then applied for Environmental Clearance for their proposed project to State Level Environment Impact Assessment Authority, TamilNadu (SEIAA-TN).

In this regard, SEIAAhas issued Terms of Reference (TOR), subject to one of the conditions that Public Hearing has to be conducted so as to address the concerns raised by the public. Based on that, the public hearing was arranged on today 20.08.2024 after getting approval from the District Collector, Dharmapuri District andas mandated public notice has been published in the newspapernamely "New Indian Express" (English)& "Dhinathanthi (Tamil)" on 17.07.2024.

The Project Proponent will make power point presentation about the said proposed project. After that the public were requested to express their views, concerns andquestions if any by indicating their name and village name from where he /she belongs and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be recorded and sent to the SEIAA-TN.

On behalf of the Project Proponent, Environmental Consultant has explained about the proposed project through a power point presentation.

In continuation to that, the public started to express their views, opinions, concerns and questions and the clarification from the project proponent are detailed below

**1.Thiru.Rajalingam, Kuppangarai, Kattukottai**

The land adjacent to this quarry is mine. Its Survey number is 318. We are not affected by this quarry. we have got Employment. secondly, 15 years ago majorly we used to cultivate sugarcane and tapioca. There is no proper road facility to transport it. If they need to carry one tractor of sugarcane, we pull it up to Mariyamman temple near Mandapam with 5 or 6 tractors. Now after the arrival of this quarry and crusher, the road is in good condition. We have a good mode of transport for agricultural products. Further, there is employment for those who are in close proximity. We have no problem with this quarry.

**2.Thiru.Ranjith, Kalappanahalli**

We, 15 years ago, when I was studying in my childhood, the road was muddy and rocky and it was difficult to use. If you want to come to Periyampatti via sakthikailash college, Kuppangarai, we need to travel extra 2 to 3 km. As the road has been laid by the quarry, we can reach within 5 or 10 minutes. so it is useful for us. We had complained about dust nuisance. For that they sprinkled water through tanker lorry and controlled the dust. Also, nearby people are working in that quarry. It is useful for us.

**3.Thiru.Selvaraj, Kuppangarai village**

There was no road facility to periyampatti and matlampatti, since my childhood days. Because of this quarry, we have all the facilities like road facility, cement road. We have no problem with this quarry.

**4.Thriu.Chennaiyan, Kuppangarai Village**

I have been living in this village for 15 years. As a person of this village, first I will tell you what is the benefit of this quarry will bring to this village. The road in front of my house was full of ups and downs. They have provided road facilities with the tax paid by this quarry. Since the quarry is functioning here, I request that this quarry should also function in the future. This is my personal opinion. secondly, I work for a contractor. He takes a lot of raw materials from this quarry.

There are 50 to 100 families working under him. So livelihood has increased. We survive because of them. In any means, there is no environmental impact due to this quarry. The distance between Kuppangari and this quarry is 800 m. Water, air and soil were not affected in any way. This is my personal opinion, thanks.

**5.Tmt.Nandhinipirya senthilkumar, President, Kalappanahalli Panchayat**

Tax paid by this A. Sasimohan Rough Stone Quarry is beneficial to the public. All the nearby workers and graduates are working in this quarry. With the permission of the District Collector, the clerk will tell the works carried out.

**6.Thiru.Venkatesh, Clerk, Kalapanahalli Panchayat**

Every year, fund was donated from mineral resource scheme to our panchayat. Part by part, around 90 lakhs to 80 lakhs is coming. We do all the scheme work to the public in each and every area. It includes, drinking water works, road facilities, street lights, sanitary facilities required for schools and street lighting facilities required by the public and 33 street lights have been installed separately. Also, I humbly inform you that, in all the villages, we are setting up paved blocks for each and every house and with this mineral resource scheme, we work as a model panchayat.

**7.Thiru.Raja, Ex-President, Kalapanahalli Panchayat**

With the money coming from this quarry, the panchayat can provide all the necessary road facilities, water facilities and street lighting facilities. There is no problem.

**8.Thiru.R.Senthilkumar (Nandhinipriyasenthilkumar), Husband of Panchayat president, Kalapanahalli.**

Because of this quarry, laying paved blocks, drinking water, wells and setting up of street lights works are useful in all panchayats. There is no harm due to this quarry. There is an employment for graduates, employment for wage workers and all are benefitted. There is no disturbance or harm to us.

**District Environmental Engineer, TNPCB, Dharmapuri**

Do you have any other opinion or views, if anyone wants to say, you can say your opinion?

**Revenue Divisional Officer, Dharmapuri**

Hello everyone, does anyone else have any comments? or otherwise we can end the public hearing meeting. The public hearing for next quarry will be started soon. Thank you.

The list of participants, audio and video recording in original with photographs of the Public hearing meeting (in Pendrive) are enclosed herewith.

| | |
|---|---|
| **District Environmental Engineer,**<br>**TamilNadu Pollution Control Board,**<br>**Dharmapuri** | **Revenue Divisional Officer**<br>**Dharmapuri** |

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், காளப்பனஅள்ளி கிராமத்தில் புல எண் : 389 (பகுதி) -யில் 2.02.5 ஹெக்டேர் (4.9915 ஏக்கர்) பரப்பளவில் அமையவுள்ள தி/ள் A.சசிமோகன் ரப் ஸ்டோன் குவாரிக்கு 20.08.2024 அன்று முற்பகல் 10.00 மணியளவில் தி/ள் ஸ்ரீ பண்ணாரியம்மன் மஹால், பெரியாம்பட்டி கிராமம், காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள் :

முன்னிலை :

| | | |
|---|---|---|
| திருமதி.R. காயத்ரி | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>தருமபுரி. |
| திருமதி. ஆ.நித்யலட்சுமி | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>தருமபுரி. |

கலந்து கொண்ட திட்ட பிரதிநிதிகள் அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி

அனைவருக்கும் எனது இனிய காலை வணக்கம், திரு.சசிமோகன் அவர்களின் சாதாரண கல்குவாரி திட்டத்திற்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி வேண்டி நடைபெறவுள்ள பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள நமது வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் இங்கு கூடியிருக்கும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு அனைவரையும் இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருக வருக என வரவேற்கிறேன்.

திரு.சசிமோகன் அவர்களின் சாதாரண கல்குவாரி திட்டத்திற்கு புவியியல் மற்றும் சுரங்கத்துறை மூலம் Mining Approval என்ற அனுமதியை பெற்று பின்பு சுற்றுச்சூழல் முன் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு விண்ணப்பித்ததின் பேரில் அவர்களிடமிருந்து Terms of Reference (TOR) என்ற வரைவறிக்கை பெற்று அதில் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தினை நடத்தி கொடுக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை கேட்டுக் கொண்டதற்கிணங்க இக்கூட்டம் நடைபெற இருக்கிறது.

இக்கூட்டம் சம்மந்தமான அறிவிப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒப்புதலின் பேரில் தமிழ் நாளிதழ் தினந்தந்தி மற்றும் ஆங்கில நாளிதழ் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் 17.07.2024-ம் தேதியன்று வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு ஒலி பெருக்கியின் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இத்திட்டத்தை குறித்து திட்ட ஆலோசகர் அவர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள். பொதுமக்கள் தங்களுக்கு ஏற்படும் ஐயங்கள், சந்தேகங்கள், கருத்துக்கள் ஏதேனும் இருப்பின் மேடைக்கு அருகே உள்ள ஒலி வாங்கியின் மூலம் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம். கருத்துக்களை தெரிவிக்கும் முன்னர் தங்களின் பெயர் மற்றும் ஊரின் பெயரை தெளிவாக தெரிவித்து விட்டு தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு எழுத்துப்பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பது தெரிவித்து கொள்ளப்படுகிறது. தற்போது இத்திட்டத்தை குறித்து திட்ட ஆலோசகர் அவர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள்.

**திட்ட ஆலோசகர்**

இத்திட்டம் குறித்த விளக்கங்களை நிழற்படம் (Powerpoint Presentation) மூலம் திட்ட ஆலோசகர் அவர்கள் விவரித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தருமபுரி.**

தற்பொழுது பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயரை தெரிவித்து விட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம்.

1. திரு.ராஜலிங்கம், குப்பாங்கரை, காட்டு கொட்டாய்

இந்த குவாரி அமைந்துள்ள பக்கத்து நிலம் என்னுடையது. 318 சர்வே எண் கொண்டது. இந்த குவாரியினால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. வேலைவாய்ப்பு தான் கிடைத்திருக்கிறது. இரண்டாவது பார்த்தீர்கள் என்றால் 15 வருடங்களுக்கு முன் கரும்பு, மரவள்ளி கிழங்கு அதிகம் பயிரிடுவோம். அவற்றை ஏற்றி செல்ல சரியான சாலை வசதி கிடையாது. ஒரு டிராக்டர் கரும்பு ஏற்றி செல்ல வேண்டுமென்றால் 5 அல்லது 6 டிராக்டர் வைத்து மண்டபம் அருகே உள்ள மாரியம்மன் கோயில் வரை இழுத்து வந்து விடுவோம். இப்பொழுது இந்த குவாரியும், கிரஷரும் வந்த பிறகு சாலை நல்ல முறையில் இருக்கிறது. எங்களுக்கு விவசாய பொருட்கள் ஏற்றி செல்ல நல்ல முறையில் இருக்கிறது. இரண்டாவது அருகில்; இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது. இந்த குவாரியினால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை.

2. திரு.ரஞ்சித், காளப்பனஅள்ளி கிராமம்

நாங்கள் 15 வருடங்களுக்கு முன்பு, நான் சிறு வயதில் படித்து கொண்டிருக்கும் பொழுது சாலையில் செல்லும் போது மண்ணும், கல்லுமாக இருக்கும், சிரமமாக இருந்தது. சக்தி கைலாஷ் காலேஜ் குப்பாங்கரை வழியாக பெரியாம்பட்டி வர வேண்டுமென்றால் 2 அல்லது 3 கிலோ மீட்டர் சுற்றி தான் வர வேண்டும். தற்போது குவாரியின் மூலம் தார் சாலை அமைத்து கொடுத்துள்ளதால் 5 அல்லது 10 நிமிடத்திலேயே வந்து விடுகிறோம் அதனால் எங்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது. இரண்டாவது தூசு பறக்கிறது என்று புகார் கொடுத்திருந்தோம். அதற்கு டேங்கர் லாரியின் மூலம் நீர் தெளித்து மாசு இல்லாமல் செய்து கொடுத்து இருக்கிறார்கள். மேலும் அருகில் இருப்பவர்கள் அந்த குவாரியில் போய் வேலை பார்க்கிறார்கள். அதனால் பயனுள்ளதாக இருக்கிறது.

3. திரு.செல்வராஜ், குப்பாங்கரை கிராமம்

நான் படிக்கும் காலத்தில் இருந்தே பெரியாம்பட்டி, மாட்லாம்பட்டிக்கு சாலை வசதி இல்லை. இந்த குவாரி வந்ததால் தான் எங்களுக்கு சாலை வசதி, ஊரில் சிமெண்ட் சாலை என எல்லா வசதியும் இருக்கிறதால், இந்த குவாரியால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை.

**4. திரு.சென்னையன், குப்பாங்கரை கிராமம்**

நான் 15 வருடங்களாக இந்த கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்த கிராமத்தின் ஒரு ஆளாக, இந்த குவாரியால் இந்த கிராமத்திற்கு என்ன நன்மை என முதலில் சொல்லுகிறேன். என் வீட்டிற்கு முன் குண்டு, குழியுமாக இருந்தது. இந்த குவாரி நிர்வாகத்தின் மூலம் அவர்கள் வரி செலுத்த கூடிய பணத்தில் சாலை வசதி ஏற்படுத்தி கொடுத்தார்கள். அதனால் இந்த குவாரி இங்கு செயல்படுவதனாலும், எதிர் காலத்திலும் செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இது என் தனிப்பட்ட கருத்து, இரண்டாவது மறைமுகமாக ஒரு ஒப்பந்ததாரரிடம் வேலை செய்கிறேன். அவர் இந்த குவாரியில் மூலப்பொருட்கள் அதிகம் எடுக்கிறார்.

அவரிடம் 50 மற்றும் 100 குடும்பங்கள் வேலை செய்கிறார்கள். அதனால் வாழ்வாதாரம் அதிகமாகியிருக்கிறது. நாங்கள் அவர்கள் மூலம் பிழைக்கிறோம். இந்த குவாரியால் சுற்றுச்சூழல் பாதிப்பு எந்த வகையிலும் இல்லை. குப்பாங்கரைக்கும் இந்த குவாரி அமைந்துள்ள இடத்திற்கும் 800 மீ தொலைவு உள்ளது. நீர், காற்று, மண் எந்த வகையிலும் பாதிப்பு அடையவில்லை. இது என்னுடைய தனிப்பட்ட கருத்து நன்றி வணக்கம்.

**5.திருமதி.நந்தினிபிரியா செந்தில்குமார், ஊராட்சி மன்ற தலைவர், காளப்பனஅள்ளி**

A.சசிமோகன் ரப் ஸ்டோன் குவாரி வரி கட்டுவதால் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது. அருகிலுள்ள தொழிலாளர்கள் மற்றும் பட்டதாரிகள் எல்லோரும் அங்கு போய் வேலை செய்கிறார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனுமதியோடு என்னென்ன பணிகள் செய்தோம் என்று எழுத்தர் சொல்லுவார்கள்.

**6.திரு.வெங்கடேஷ், செயலாளர், காளப்பனஅள்ளி ஊராட்சி**

எங்கள் ஊராட்சிக்கு இந்த கனிம வள திட்டத்தின் மூலம் வருடா வருடம் நிதி அளிக்கிறார்கள். 90 இலட்சம் முதல் 80 இலட்சம் என பகுதி பகுதியாக வருகிறது. ஒவ்வொரு பகுதிக்கும் பொதுமக்களுக்கு பயனுள்ள அனைத்து திட்ட பணிகளையும் மேற்கொள்கிறோம். இதில் குடிநீர் பணி, சாலை வசதி, தெரு விளக்கு, பள்ளிகளுக்கு தேவையான சுகாதார வசதி மற்றும் பொதுமக்களின் தேவையான தெருவிளக்கு வசதி மற்றும் ஆங்காங்கே 33 தெரு விளக்குகள் தனி தனியே போடப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து குக்கிராமங்களிலும் தற்போது பேவர்பிளாக் அமைத்து ஒவ்வொரு குடியிருப்புக்கும் பயனுள்ளதாக இந்த கனிம வளத்திட்டத்தில் எங்க ஊராட்சியில் செய்து முன் மாதிரியாக விளங்குகிறோம் என்று பணிவுடன் தெரிவித்து கொள்கிறேன்.

**7. திரு.ராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், கொண்டப்ப நாயக்கனஅள்ளி கிராமம்**

இந்த குவாரியில் வருகின்ற பணத்தை வைத்து ஊராட்சிக்கு தேவையான சாலை வசதி, தண்ணீர் வசதி, தெரு விளக்கு வசதி அனைத்துமே செய்து கொடுக்க முடிகின்றது. நல்லாயிருப்பதால் எந்த பிரச்சினையும் இல்லை.

**8. திரு.R.செந்தில்குமார், (நந்தினிபிரியா செந்தில்குமார்) ஊராட்சி மன்ற தலைவர், கணவர் காளப்பனஅள்ளி**

இந்த குவாரியினால் எல்லா ஊராட்சிக்கும் பேவர் பிளாக், குடிநீர், கிணறு வெட்டுதல், தெருவிளக்கு அமைத்தல் எல்லாம் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த குவாரியால் எந்த பாதிப்பும் கிடையாது. பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கும் வேலைவாய்ப்பு, கூலி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு என எல்லாரும் பயனடைந்து இருக்கிறார்கள். எங்களுக்கு எந்த தொந்தரவும், பாதிப்பும் இல்லை.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி**

வேறு ஏதாவது கருத்து இருக்குங்களா, யாராவது சொல்ல வேண்டும் என்றால் உங்க கருத்துக்களை சொல்லலாம்.

**வருவாய் கோட்டாட்சியர், தருமபுரி**

அனைவருக்கும் வணக்கம், வேறு யாருக்காவது கருத்துக்கள் இருக்குங்களா, இல்லைனா இந்த கருத்து கேட்பு கூட்டத்தை இதோடு முடித்து கொள்ளலாம். அடுத்த குவாரிக்கானது இன்னும் சற்று நேரத்தில் ஆரம்பித்து கொள்ளலாம். நன்றி

மேலும் பொதுமக்கள் கருத்து கேட்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவேடு, ஒலி மற்றும் ஒளிப்பதிவுகளின் குறும்பதிவி (Pendrive) மற்றும் புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**தருமபுரி**

**வருவாய் கோட்டாட்சியர்**
**தருமபுரி**